செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்க எண்ணிக்கைகள்: 90 நாள்: 09.06.2025

# அகராதியியல் புலம்

## நடத்தும்

# தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கான அகராதி உருவாக்கம்

## Making of Dictionary for Tamil Classical Texts

பயிலரங்கம்

Workshop - 09

(25.06.2025 - 01.07.2025)

<u>அறிவிப்பும் அழைப்பும்</u>

தொல்காப்பியம் தொடங்கி இறையனார் களவியல் ஈறாக உள்ள 41 தமிழ்ச் செவ்விலக்கிய நூல்களின் சொற்பொருள் விளக்கத்தினை அறிந்துகொள்ளத் தொல்காப்பிய அகராதி, புறநானூறு அகராதி முதலான அகராதிகளும் குறுந்தொகைச் சொல்லடைவு, அகநானூற்றுச் சொல்லடைவு, திருக்குறட் சொல்லடைவு முதலான சொல்லடைவு நூல்களும் பல்வேறு அறிஞர்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்குத் தொடரடைவுகளும் (Concordance) உ.வே.சா. செம்மொழித் தமிழ்த் தரவகமும் (Corpus) உருவாக்கப்பட்டுள்ளன. செம்மொழித் தமிழ் இணைச்சொற்களஞ்சியம் (Thesarus) உருவாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாகத் தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கான சொற்பொருள் விளக்கத்திற்குத் துணைசெய்யும் சிறப்பு அகராதி ஒன்றை உருவாக்கும் முயற்சியைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்த அகராதி உருவாக்கத்தின் செயல்முறையினை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதை இப்பயிலரங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

எளிதில் புரிந்துகொள்ள இயலாத தமிழ்ச் செவ்விலக்கியச் சொற்களுக்கு அகராதி வடிவில் பொருள் விளக்கம் கொடுக்கும்போது இலக்கிய வளர்ச்சிக்கு அது வித்தாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **“தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கான அகராதி உருவாக்கம்”** என்னும் தலைப்பில் பயிலரங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் தமிழியல், அகராதியியல், மொழியியல் அறிஞர்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் தமிழியல், மொழியியல் துறையில் முனைவர் பட்டம்/ ஆய்வியல் நிறைஞர் பட்டம் மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை : 40
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 25.06.2025 முதல் 01.07.2025 வரை
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/EgCStfL99D4VLUFGA என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 22.06.2025 காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 23.06.2025 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**